# பா.ஜ.க.வின் அரசியலை வடநாட்டு மக்கள் நம்பமாட்டார்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! - 3ஆம் பக்கத் தொடர்ச்சி...



சென்னை செயிண்ட் ஜார்ஜ் பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் (25–01–2024) நடைபெற்ற 'மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள்' பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்டக் கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு நினைவு பரிசு வழங்கினார். உடன் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மாவட்டக் கழகச் செயலாளர்கள் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தா.இளைய அருணா, தயாநிதி மாறன் எம்.பி., என்.ஆர். இளங்கோ எம்.பி., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., எம்.கே. மோகன் எம்.எல்.ஏ மேயர் பிரியா துணை மேயர் மு.மகேஷ் குமார் உள்ளிட்ட தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொரோனா காலத்தில் திடீர் என்று ஊரடங்கு போடப்பட்டதால் தங்களின் சொந்த ஊருக்குத் திரும்புவதற்குக் கூட இந்தி பேசும் மக்களுக்குப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தராமல், பல நூறு கிலோ மீட்டர் தூரம் மக்கள் நடந்து தங்களின் ஊருக்குப் போன கொடுமையைப் பார்த்து நாம் கண்ணீர் விட்டோம். பலர் தண்டவாளத்தில் நசுங்கி இறந்தார்கள். அப்படி என்றால், கொரோனாவை விடக் கொடியவர்கள் யார் என்றால் பா.ஜ.க. அரசுதான். சாரை சாரையாக நடந்து சென்ற இந்தி மக்களுக்கு நீங்கள் காட்டிய இரக்கம் இதுதானா? அந்த மக்களை, இப்போது ராமர் கோயிலைக் காண்பித்து திசைதிருப்பப் பார்க்கிறார்கள்.

சமூக வலைதளங்களில் நான்கைந்து நாட்களாக ஒரு காணொளி பரவி வருகிறது. 'எங்களுக்கு படிப்புதான் தேவை' என்று இந்தியில் பேசும் ஒரு சிறுவனின் பழைய காணொளி அது. இந்த விழிப்புணர்வு ஏற்பட்டு விடக்கூடாது என்று பா.ஜ.க நினைக்கிறது. மக்களை ஏமாற்றும் பா.ஜ.க.வின் அரசியலை வடமாநில மக்கள் இனியும் நம்பத் தயாராக இல்லை. இந்த முறை வட மாநிலங்களிலும் பா.ஜ.க. வெற்றி பெற முடியாது. அதுதான் உண்மை.

லட்சக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்ற சேலம் இளைஞர் அணி மாநாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. அதில் மிக முக்கியமான தீர்மானம் "இந்துக்களின் உண்மையான எதிரி பா.ஜ.க. தான் என்பதை அம்பலப்படுத்துவோம்" என்பது! இந்தப் பரப்புரையை எல்லோரும் செய்தாக வேண்டும். இது இளைஞரணியினருக்கான உறுதிமொழி மட்டுமல்ல, எல்லோரின் உறுதிமொழியாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மதத்தை கையில் எடுக்கிறது பா.ஜ.க.**

பா.ஜ.க. தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மதத்தைக் கையில் எடுக்கிறது. நாம் இந்தியாவைக் காக்க பா.ஜ.க.வின் தோல்விகளை, அவர்களின் தமிழ்மொழி விரோதப் போக்கை அம்பலப்படுத்துவோம்.

பா.ஜ.க.வின் தோல்விகளை நான் பட்டியலிட வேண்டும் என்றால், 2014–இல் 414 ரூபாயாக இருந்த சமையல் சிலிண்டர் விலை இப்போது 918 ரூபாய். 72 ரூபாயாக இருந்த ஒரு லிட்டர் பெட்ரோல் இப்போது 102 ரூபாய். 55 ரூபாயாக இருந்த டீசல் இப்போது 94 ரூபாய். இப்படி அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தையும் பட்டியல் போட்டுக்கொண்டே போகலாம்.

இவ்வளவு நாட்களாக பா.ஜ.க. கூடவே இருந்து அவர்களின் மக்கள்விரோதச் செயல்கள் எல்லாவற்றுக்கும் ஆமா சாமி போட்டவர்தான் பழனிசாமி. பா.ஜ.க.வின் பாதம்தாங்கியாக பவனி வந்தார். தமிழ்நாட்டின் உரிமைகள் அனைத்தையும் டெல்லியில் அடகு வைத்தார். தன்னுடைய நாற்காலியை காப்பாற்றிக் கொள்வதிலேயே நான்கு ஆண்டுகளை ஓட்டிவிட்டார்.

பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்துக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தையும், மூன்று வேளாண் சட்டங்களையும் ஆதரித்தார். நீட் தேர்வைத் தமிழ்நாட்டுக்குள் நுழையவிட்டார். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை ஒரே நாளில் யூனியன் பிரதேசமாக மாற்றிய சட்டத்தை ஆதரித்தார். ஜி.எஸ்.டி.யை எதிர்க்காமல் மாநில நிதிநிலையை பாதாளத்துக்குத் தள்ளினார். தமிழ் மொழியைப் புறக்கணித்து இந்தித் திணிப்புக்கு உதவினார். அதனால்தான் மக்களால் தோற்கடிக்கவும் பட்டார்.

**சிறுபான்மையினருக்கு பா.ஜ.க. செய்த துரோகம்!**

பா.ஜ.க.வோடு சேர்ந்து சிறுபான்மைச் சகோதரர்களுக்கு அவரும் அ.தி.மு.க.வும் செய்த துரோகத்தை மறைத்து இப்போது ஒரு நாடகம் போடுகிறார். அதைத்தான் தம்பி தயாநிதி சொன்னார். ஆனால் சிறுபான்மையின மக்கள் அவர் செய்த துரோகங்களை மறக்கவில்லை, மறக்கவும் மாட்டார்கள்! நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் எல்லா இடத்திலும் தோற்கடிக்கப்பட வேண்டும்.

இந்தியா கூட்டணியின் வெற்றியில்தான் இந்தியாவின் எதிர்காலமே இருக்கிறது. இந்தியா கூட்டணியின் ஆட்சி உண்மையான கூட்டாட்சியாக அமையும். அத்தகைய ஆட்சியில் எல்லா இனம் மொழி மத மக்களும் சம உரிமை கொண்டவர்களாக வாழ்வார்கள்! வாழ வைப்போம்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற சமநிலைச் சமுதாயத்தை அமைக்க மொழிப்போர்த் தியாகிகளின் தியாகத்தின்மீது உறுதி ஏற்போம்! வென்று காட்டுவோம்! தன்னை ஈந்து தமிழைக் காக்கும் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி விடைபெறுகிறேன். தமிழ் வாழ்க! தமிழ்நாடு வாழ்க! மொழிப்போர் வீரர்களின் தியாகம் வெல்க.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### தேனினும் இனிய குரல் வளத்தால் ரசிகர்களின் நெஞ்சில் இடம் பிடித்தவர்!

# இளம் வயதிலேயே தேசிய விருது பெற்றவர் பவதாரணி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை,ஜன.27- இளம் வயதிலேயே தேசிய விருது பெற்றவர் பவதாரணி என்று அவரது மறைவிற்கு இரங்கல் தெரிவித்து வெளியிட்ட செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

பிரபல பின்னணிப் பாடகியும் இசைஞானியின் அன்பு மகளுமான பவதாரணி அவர்களின் அகால மரணத்தால் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.



இசைமேதைகள் நிறைந்த குடும்பத்தில் பிறந்த பவதாரணி அவர்கள், தேனினும் இனிய தனது குரல்வளத்தால் இளம் வயதிலேயே இரசிகர்களின் நெஞ்சில் தனியிடம் பிடித்தவர் ஆவார். கேட்டதும் அடையாளம் கண்டுகொண்டு பரவசமடையச் செய்யும் மிகவும் தனித்துவமான குரல் அவருடையது. பாரதி திரைப்படத்தில் தனது தந்தையின் இசையமைப்பில் பாடிய 'மயில் போல பொண்ணு ஒன்னு' பாடலுக்காக இளம் வயதிலேயே தேசிய விருதும் பெற்றவர். இசையமைப்பாளராகவும் பல படங்களுக்குப் பணிபுரிந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து இசையுலகில் எத்தனையோ சாதனைகளைச் செய்திருக்க வேண்டிய பவதாரணி அவர்களின் திடீர் மறைவு இசையுலகில் ஈடுசெய்தற்கரிய இழப்பு. அவர் விட்டுச் செல்லும் இடம் அப்படியே இருக்கும்.

தனது பாசமகளை இழந்து துடிக்கும் இசைஞானி அவர்களுக்கும், பவதாரணி அவர்களின் சகோதரர்கள் யுவன் சங்கர் ராஜா, கார்த்திக் ராஜா உள்ளிட்ட குடும்பத்தினருக்கும் திரையுலகினருக்கும் இரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கலுரையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### தமிழ் வளர்த்த மதுரையில்

# முதல்வர் திறந்து வைத்த முத்தமிழுக்குப் பெருமை சேர்க்கும் 3 கட்டுமானங்கள்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

*சென்னை, ஜன. 27 - தினகரன் நாளேட்டில் நேற்று முன்தினம் வெளியான தலையங்கம் வருமாறு:*

பொறுப்பேற்றதில் இருந்து தமிழ்நாடு மக்களின் நலன் கருதி பல்வேறு நலத்திட்டங்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். முத்தமிழுக்கு பெருமைக்கு சேர்க்கும் விதமாக, மூன்று முதன்மையான கட்டுமானங்களை, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரைக்கு அளித்திருக்கிறார். மதுரை அருகே கீழடியில் 2 ஏக்கர் பரப்பில், ரூ.18.43 கோடி செலவில் அருங்காட்சியகத்தை தமிழக அரசு அமைத்தது. இதனை கடந்தாண்டு மார்ச் 5ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். அடுத்ததாக, மதுரை புதுநத்தம் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை மக்கள் பயன்பாட்டுக்காக, கடந்தாண்டு ஜூலை 15ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

தற்போது 4 லட்சத்துக்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு அலங்கரிக் கின்றன. வயது வித்தியாச மின்றி, சிறுவர்க ள், பெரியவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு வாசிப்பு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மிக முக்கியமாக போட்டி தேர்வு எழுதுபவர்களின் பொக்கிஷ மாக கலைஞர் நூற்றாண்டு நூலகம் திகழ்கிறது. அதற்கான புத்தகங்கள் அதிகமுள்ளதால், நாள்தோறும் ஏராளமானோர் வந்து செல்கின்றனர்.

இதுவரை கலைஞர் நூலகத்தை மட்டும் சுமார் 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளனர். மூன்றாவதாக, கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம். தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டாக கருதப்படும் ஜல்லிக்கட்டுக்கு பிரமாண்ட அரங்கம் கட்டப்படுமென முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.



தினகரன்

முத்தமிழுக்கு மணி மகுடம்

இதையடுத்து, ரூ.62.77 கோடி மதிப்பில் அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் சர்வதேச தரத்தில் ஜல்லிக்கட்டுக்காக முதல் அரங்கம் கட்டப்பட்டிருப்பது மிகச்சிறப்பு. கேலரியில் 5 ஆயிரம் பேர் உட்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பார்வையிடும் வகையில் சிறப்புற செதுக்கப்பட்டுள்ளது. போட்டியை கண்டு செல்வதோடு விட்டு விடாமல், தமிழர் பாரம்பரியம், ஜல்லிக்கட்டு தொடர்பான அரிய நிகழ்வுகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. நூலகம், தியேட்டர் என பார்த்து பார்த்து செதுக்கியுள்ளது அரசு.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த அரங்கை நேற்று திறந்து வைத்ததும், ஜல்லிக்கட்டு போட்டியும் அமர்க்களமாக அரங்கேறியுள்ளது. ஐபிஎல் போல லீக் போட்டிகளை நடத்தவும், ஜல்லிக்கட்டு இல்லாத நாட்களில் பிற விளையாட்டு போட்டிகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

### பெண் போலீசிடம் அநாகரிகமாக நடந்து கைதான

# இந்து முன்னணி நிர்வாகியின் ஜாமீன் மனு தள்ளுபடி!

## அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் பா.நம்பிசெல்வன் ஆஜராகிய வழக்கில் உத்தரவு!

*மதுரை, ஜன. 27*

தனது உள்ளாடையை கழற்றி பெண் போலீசிடம் தகராறில் ஈடுபட்ட இந்து முன்னணி மாவட்ட செயலாளரின் ஜாமீன் மனுவை உயர்நீதி மன்ற மதுரை கிளை தள்ளுபடி செய்தது.

தஞ்சை மேற்கு காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் போலீஸ்காரார் ஒருவர். கடந்த ஜன.6ம் தேதி ரயிலடியில் இருந்து பஸ் நிலையம் வரை ரோந்து சென்றார். அப்போது ரயிலடி ஆஞ்சநேயர் கோயில் விலக்குப் பகுதியில் ஆட்டோவில் அமர்ந்திருந்த 3 பேர் மதுபானம் அருந்திக் கொண்டு போக்குவரத்திற்கு இடையூறாக இருந்தனர் இதைப் பார்த்த பெண் போலீஸ்காரார், 'பொது இடத்தில் ஏன் இப்படி செய்கிறீர்கள் என கண்டித்துள்ளார். அப்போது மூவரும் அவதூறாக பேசி, தாங்கள் ஒரு அரசியல் கட்சியினர் என கூறி மிரட்டி யுள்ளனர்.

மேலும், மதுபாட்டிலால் குத்தி கொலை செய்வதாக மிரட்டி சாலையை மறித்து இடையூறு செய்தனர். இது குறித்து பெண் போலீஸ்காரார் அளித்த புகாரின்பேரில் தஞ்சை மேற்கு போலீசார் விசாரணை நடத்தியதில், 'மது குடித்து இடையூறு செய்தவர்கள் இந்து முன்னணி மாவட்ட செயலா ளர் குபேந்திரன் மற்றும் முத்தமிழ்செல்வன், ரவி ஆகியோர் என தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் மூவர் மீதும் போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

இந்த வழக்கில் தங்களுக்கு ஜாமீன் கோரி 3 பேரும் ஐகோர்ட் மதுரை கிளையில் மனு செய்தனர். இந்த மனுவை நீதிபதி எம்.தண்டபாணி விசாரித்தார். அரசு கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் பா.நம்பிசெல் வன் ஆஜராகி, 'பொது இடத்தில் மக்களுக்கு இடையூறாக நடக்கக் கூடாது என கூறிய பெண் போலீசிடம் குபேந்திரன் தனது உள்ளாடைகளை கழற்றி எறிந்து தவறாக நடந்துள்ளார். இவர் மீது மேலும் பல வழக்குகள் உள்ளன. இவர் களுக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என ஆட்சேபம்' தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தரவு:

இந்த வழக்கின் முதல் மனுதாரரான குபேந்திரன் (எ) குமார் மீது மேலும் 6 வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவருக்கு ஜாமீன் வழங்க முடியாது என்பதால் மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. முத்தமிழ்ச் செல்வம் மற்றும் ரவி ஆகியோர் ஏற்கனவே சிறையில் உள்ள காலத்தை கருத்தில் கொண்டு ஜாமீன் வழங்கப்படுகிறது. இருவரும் தஞ்சை மேற்கு போலீசில் தினசரி காலை 10.30 மணிக்கு ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளார்.




மதுரை அழகர் கோவில் சாலையில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு அலகு 2ல் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 24.1.2024 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### விருகம்பாக்கம் அரங்கநாதன்
### சனவரி 27 (1965)



**இந்தித் திணிப்பை தமிழகமே எதிர்த்து மாபெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில் விருகம்பாக்கம் கழகத் தோழர், 35 வயதே ஆன அரங்கநாதன் மத்திய அரசின் தொலைபேசித் துறையில் பணியாற்றியவர். விருகம்பாக்கம் இளைஞர்களுக்கு திராவிட இயக்க ஏடுகளை வரவழைத்து படிக்கச் செய்வதை தனது கடமையாகக் கொண்டிருந்தார்.**

**இந்தியை எதிர்க்க பெரும் தியாகம் செய்ய வேண்டுமென ஒருமாத காலமாக தனது சகோதரியிடம் கூறி வந்தவர். திடீரென 27.1.1965 அன்று அதிகாலை இரண்டு மணியளவில் ஓர் மாமரத்தின்கீழ் தன் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி, தீ வைத்துக் கொண்டு, "என் உடலையே தமிழுக்காகவும், இந்தியை எதிர்ப்பதற்காகவும் தியாகம் செய்கிறேன். வாழ்க தமிழ்! ஒழிக இந்தி!" என முழக்கமிட்டவாறே உயிர்த் துறந்த தியாகி.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**